# Peruraathna Seviilakiya Suvadigal

**Dr. P. Rajeswari**
*Assistant Professor*
*Thavathiru Santhalinga Adigalar Arts & Science Tamil College, Kovai*

**J. Sowndarya**
*Researach Scholar*
*Thavathiru Santhalinga Adigalar Arts & Science Tamil College, Kovai*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358695

**Abstract**
*Tamil is a lauguage which is know as the oldest amoung world launguages. There are numbers of literary works in tamil which are seen in the from of inccriptions ( rocks, copper plates ), plamleafe manuscripts and paper manuscripts. Among these, palmleafe manuscripts are considere as most common and basic sources of tamil literary works from long back. Chithambara adikalar library of perur of perur adhinan, is preserving huge volumes of such palam leaves. From them, the manuscripts of classical literature were studies and explain as follows.*
***Keywords:*** *Chithambara Adikalaar, Peruraathinam, Palmleafe, Manuscripts*

**Bibliography**

1. peruraathina suvadikal; Thavathiru santhalingaadikalar arts science and tamil college, Perur, Coimbatore – 10
2. sri meenakshi suntharan pillai sariththiram, Dr U. Saminaathaiyar, Kesari publication, Chennai – 1950
3. En sariththiram, Dr U. Saminaathaiyar, Chennai – 1950
4. The ten idylls, source text and community, Thiyaakarajar publications, Chennai – 1961
5. Thirumurukatrupadai, Parimezakar urai, E. Araventhan, Parisal publications, Chennai - 2023

# பேரூராதீனச் செவ்விலக்கியச் சுவடிகள்

***முனைவர் ப. ராஜேஸ்வரி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி
பேரூர், கோவை

***ஜெ. சௌந்தரியா***
முனைவர் பட்ட ஆய்வாளர்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*கல்தோன்றி மண்தோன்றா காலத்தில் முந்தோன்றிய மூத்த மொழியாம். தமிழ் கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி, அச்சுப்புத்தகம் என பல பரிணாம வளர்ச்சியினை அடைந்துள்ளது. இவற்றில் நமக்கு இலக்கிய வகைகள் பெரும்பாண்மையும் ஓலைச்சுவடி வடிவத்திலேயே கிடைக்கப்பெறுகின்றன. இத்தகு ஓலைச் சுவடிகளை மையமாகச் கொண்டு பேரூராதீனம் தன்னகத்தே வைத்துள்ள செவ்விலக்கியச் சுவடிகள் குறித்து ஆய்வதாக இவ்வாய்யு அமைகின்றது.*
***திறவுச்சொற்கள்:*** *பேரூராதீனம், ஓலைச்சுவடி, செம்பதிப்பு, செவ்விலக்கியங்கள், இரா. தெய்வசி காமணிக்கவுண்டர், திருமுருகாற்றுப்படை, பாடவேறுபாடுகள்*

**முன்னுரை**

தமிழர் தம் வாழ்வியல், அறிவியல், கல்வி, பண்பாடு போன்ற பல பெருமைகளை இன்றைய ஆய்வுலகம் அறிந்திடத் துணை நிற்பனவற்றுள் அச்சில் வாரா அருந்தமிழ்ச் சுவடிகளும் குறிப்பிடத்தக்கன. அவற்றை முறைப்படி தொகுத்தும், படி எடுத்தும் உரிய முறையில் பாதுகாக்காததால் பல அரிய சுவடிகள் சி திலம் அடைந்து அழிந்து போயின. ஆயிரக்கணக்கான சுவடிகள் தமிழ் ஆர்வலர்களிடமும், அவர்தம் இல்லங்களிலும் உள்ளன. அவற்றின் அருமை பெருமையினை உணர்ந்து காப்பவரும் உண்டு. உணராது இருப்போரும் உண்டு. உணர்ந்திருப்போர் முறையாக அவற்றைப் பேணிக்காக்கும் நிறுவனங்களிடம் ஒப்படைத்தல் தமிழுக்கு அவர்கள் செய்யும் மிகப் பெரிய தொண்டு ஆகும். அவ்வகையில் இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம் என்பது பேரூராதீனம் இதுநாள் வரை பேணிக்காத்த சுவடிகளில் செவ்விலக்கிய சுவடிகளைத் தனித்தெடுத்து அதன் பாட வேறுபாடுகளைக் கண்டறிந்து, செவ்விலக்கியச் செம்பதிப்பிற்கு அவை தரும் பயனை விளக்குவதாகும்.

**சுவடிகளின் இருப்பும் வரலாறும்**

எழுமாத்தூர் வேலம்பாளையம் புலவர் இரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் தொகுத்து வைத்திருந்த அருந்தமிழ்ச் சுவடிகள் அனைத்தையும் அழிந்து போகாமல் காத்து தமிழறிஞர்கட்குப் பயன்படும் வண்ணம், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் வழி கல்லூரி நூலகத்திற்கு வழங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள் 426 ஓலைச்சுவடிகள் உள்ளன.

கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், அருணகிரிப்புராணம் உட்பட பல புராணச் சுவடிகள் உள்ளன. அவ்வாறே கொங்குநாட்டு இலக்கியங்கள் பலவும் இச் சுவடிகளில் உள்ளன. சோதிட நூல்களுக்கான சுவடிகளும், வைத்திய நூல்களுக்கான சுவடிகளும் உள்ளன. இயற்றியவர் பெயர் தெரியாத கூத்த நூல் என ஒரு சுவடி உள்ளது. பழந்தமிழர் இசைநூலாகிய அறிவனார் இயற்றிய பஞ்சமரபுச் சுவடியும், பஞ்சமகா சரித லட்சணம், பரத சங்கிரகம், தாளமரபு முதலாய சுவடிகளும் உள்ளன. இவை இசைத்தமிழ் இலக்கியங்களாகவும், கூத்தநூல் இலக்கியங்களாகவும் இருக்கக்கூடும் என்பது கருத்து. இச்சுவடிகளுள் நிகண்டுகளும், அகராதிகளும், பழமொழிச் சுவடிகளும் உள்ளன.

இலக்கணநூல்களாக யாப்பருங்கலக்காரிகை, நன்னூல் விருத்தியுரை, நேமிநாதம், காரிகை உரை, நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், சிதம்பரப்பாட்டியல், நவநீதப் பாட்டியல் உரை, வெண்பாப்பாட்டியல், குவலயானந்தம், இலக்கணக் கொத்து முதலான சுவடிகளும் உள்ளன. இவற்றுடன் கீதை உரையும், தக்கை இராமாயணமும் உள்ளன. நாட்டுப் பாடல்கள் எனும் நாட்டார் வழக்காறு பாடல்களும், வரலாறுகளும் அடங்கிய சுவடிகளும் உள்ளன. சிற்றிலக்கிய வகைகளில் பல்வேறு வடிவங்களும் இச்சுவடி இலக்கியங்களுள் காணக் கிடைக்கின்றன. இவ்வகையில் பேரூர் பச்சை நாயகி சதகம், பேரூர் சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ், பேரூர் சிவகாமியம்மை அகவல் முதலியன குறிப்பிடத்தக்கன.

## செம்பதிப்பு

தமிழ்ச் செவ்வியல் நூல்கள் என தமிழ் கூறும் நல்உலகம் தொகுத்த 41 நூல்களில் திருக்குறளும், நாலடியாருமே முதன்முதலாக அச்சு வடிவம் பெற்றன. 1812இல் தஞ்சை மாநகரைச் சேர்ந்த மலையப்பப் பிள்ளையின் மகனாகிய ஞானப்பிரகாசன் என்னும் அறிஞர் திருக்குறள், நாலடியார் ஆகிய இரண்டு செவ்விலக்கிய நூல்களை இணைத்து அச்சிட்டு வெளியிட்டார். செவ்வியல் நூல் வரிசையில் உள்ள வேறு எந்த ஒரு நூலும் இந்த இரு நூல்களுக்கு முன்னர் அச்சானதாகச் சான்றுகள் இல்லை. செவ்வியல் இலக்கியப் பதிப்பு வரலாறு தொடங்கி இன்று இரு நூற்றாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் சில செவ்விலக்கிய நூல்களுக்குச் செம்பதிப்புகள் இன்னும் வெளிவரவில்லை.

2004ஆம் ஆண்டு இந்திய அரசு தமிழ் மொழி செம்மொழித் தகுதியுடைய மொழி என்ற அறிவிப்பை வெளியிட்ட பின்னர் தமிழ் நூல்களின் குறிப்பாக செவ்வியல் நூல்களின் பதிப்பு, பாடவேறுபாடுகள், இவற்றை உள்ளடக்கிய செம்பதிப்பு என்னும் சொல்லாடல்கள் சற்று அதிகமாகவே நிகழ்த்தப்படுகின்றன.

செம்பதிப்பு என்ற சொல்லாடலை நிகழ்த்து வதற்கான வாய்ப்பைப் பாட வேறுபாடுகளே வழங்குகின்றன. தொன்மையான இலக்கிய இலக்கண உருவாக்க மரபைக் கொண்ட மொழியில் தோற்றம் பெறுகின்ற எல்லா நூல்களும் பாட வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பான ஒன்றாக அமைந்து விடுகிறது.

நீண்ட நெடிய இலக்கிய, இலக்கண உருவாக்க மரபைக் கொண்ட மொழியில் ஒரு காலத்துப் புலமை மரபினரால் உருவாக்கப்படுகின்ற இலக்கண, இலக்கிய நூல்கள் பல்வேறு வடிவங்களில், பல்வேறு சூழல்களை எதிர் கொண்டு பயணித்து வருகின்ற நிலையைக் கொண்டிருக்கும். அந்தப்பயண இடைவெளியில் விடுபடல்கள், இடைச்செருகல்கள், வேறுபாடுகள், திருத்தங்கள் போன்றன மூலநூலோடு இரண்டறக் கலந்துவிடுகின்ற நிலை ஏற்பட்டு விடுகின்றன. எது உண்மை பாடம், எது இடையில் சேர்ந்த பாடம் என்று நாம் எளிதில் கண்டு மதிப்பிட முடியாத நிலையை அவை பெற்றுவிடுகின்றன.

## பேரூராதீனச் செவிலக்கியச் சுவடிகள்

தமிழும் சமயமும் தன் இரு கண்களாக கொண்டு வாழ்ந்தவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார். அவர்தம் பெரும் முயற்சியினால் செவ்வியல் இலக்கியச்

சுவடிகளுடன் பல்வேறு வகையான சுவடிகள் தொகுத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவை அனைத்தும் எழுமாத்தூர் வேலம்பாளையம் புலவர். இரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் தொகுத்து வழங்கியவை ஆகும். சுவடிகளைக் காத்து அவை அழியா வண்ணம் கல்லூரிக்கு அளித்த புலவர் அவர்களுக்கு தமிழுலகம் நன்றிக்கடன் பட்டுள்ளது.

திருமடத்தின் கல்லூரி நூலகத்தில் உள்ள சுவடிகளுள் செவ்விலக்கியச் சுவடிகள் என வகைப்படுத்தும் பொழுது புறத்துறை (TSA&-CAL&0047) என்னும் தலைப்பினுள் பத்துப் பாடல்களில் உள்ள நெடுநல்வாடை, குறிஞ்சி என இரண்டும் உள்ளது. இதில் நெடுநல்வாடை எனும் தலைப்பில் "வையகம் பணிப்பு" எனத் தொடங்கி மொத்தம் *12* ஏடுகள் உள்ளன. பகையோடும் பாசறையுள்ளான் என வெண்பாவுடன் முடிக்கப்பட்டுள்ளது. குறிஞ்சி என எழுதப்பட்ட ஏட்டில் என்றோழி படரிழை எனத் தொடங்கி முடிவு பெறாமல் உள்ளது. இச் சுவடி கட்டையுடன் கூடிய சுவடி. பக்கத்திற்கு எட்டு முதல் ஒன்பது வரையிலான வரிகளைக் கொண்டுள்ளது.

செவ்விலக்கிய காப்பிய நூல்களுள் ஒன்றான சிலப்பதிகாரச் சுவடிகளும் உள்ளன. (TSA&-CAL&0071) என்ற எண் இடப்பட்டுள்ள இச்சுவடி கட்டையுடன் உள்ளது. முதல் ஏட்டிலேயே சிலப்பதிகாரம் எனத் தலைப்பிட்டு "குணவாயிற் கோட்டத்தரசு" எனத் தொடங்கப்பட்டுள்ளது. நாடுகாண் காதையில் வரும் கட்டுரை பூம்புகார்க் காதை என இச்சுவடியில் குறிப்பிடப்படுகிறது.

சட்டைமுனி முன்ஞானம், சட்டைமுனி பின்ஞானம், திருமுருகாற்றுப்படை எனும் பெயரிடப்பட்ட சுவடி (TAS&CAL&0026) ஒன்று உள்ளது. இதில் சட்டைமுனி முன்ஞானம் நூறு, சட்டைமுனி பின்ஞானம் நூறு எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும் கயிலாசமூர்த்தி முன்ஞானம் நூறு கயிலாசமூர்த்தி பின்ஞானம் நூறு என்னும் பெயரே ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. இதில் *24* ஏடுகள் இவ்விரு நூல்களும் உள்ளன பின்பு *101 (ளக)* ஆம் ஏட்டின் பின்பகுதியில் இருந்து திருமுருகாற்றுப்படை எழுதப்பட்டுள்ளது.

***101-*ஆம் ஏழு முதல் *111-*ஆம் (ÍP முதல் Í¯P வரை) ஏடு வரை திருமுருகாற்றுப்படையின் மூலம் எழுதப்பட்டுள்ளது. *111*ஆம் எட்டின் ஏழாம் வரியிலிருந்து உரை எழுதப்பட்டுள்ளது. தலைப்புப் பகுதியில் திருமுருகாற்றுப்படை உரை என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுரை பரிதியார் உரை என அறியமுடிகிறது.

பத்துப்பாட்டின் சில நூல்கள் சுவடிகளாக உள்ளது போலவே, கீழ்க்கணக்கு நூல்களான நாலடியார், மும்மணிக் கோவை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது போன்ற சுவடிகளும் (TSA&CAL&0128) உள்ளன. இவற்றுள் இனியவை நாற்பது முடிவு இல்லை. ஆசாரக் கோவை என பெயரிடப்பட்ட சுவடி ஒன்றும் உள்ளதை அறியமுடிகிறது.

## செவ்விலக்கியச் செம்பதிப்பில் சுவடிகளின் பங்கு

ஒரு நூலுக்குக் கிடைக்கும் பதிப்புகளையும், ஏடுகளையும், சுவடிகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பதிக்கப்படும் தரமான பதிப்பே செம்பதிப்பு எனப்படும். கிபி.*600* க்கு முந்தைய காலத்தை செவ்வியல் காலமாகக் கொண்டு, அக்காலகட்டத்தில் தோன்றிய நூல்களை செவ்வியல் நூல்கள் எனக் கூறப்படுகிறது. இவற்றைச் செம்பதிப்பு செய்யும் பணிகள் சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டவை ஆகும்.

செம்பதிப்பு எனக் கூறும் பொழுதே நினைவிற்கு வரும் முதல் பெயர் உ.வே. சாமிநாதையர். அவர் தம் நூல்களான மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம், என் சரித்திரம் என்பனவவற்றுள் தமிழ் மொழியின் இலக்கிய இலக்கண நூல்கள் அச்சிடப்பட்ட வரலாற்றை கூறியுள்ளார். இதில் ஒரு இலக்கியத்தைத் தேட அதன் உதாரணப் பாடலான மற்றொரு இலக்கியத்தைக் கண்டு, படித்து அதன் சுவையில் அவ்விலக்கியச் சுவடியைத் தேடுவதாகவே நூல் அமைகிறது. அவர் செம்பதிப்பு செய்த

நூல்களில் முதன்மை ஆதாரமாக இருப்பவை ஏட்டுச்சுவடிகளே என்பது கண் கூடு.

சுவடிகளையும் பதிப்புகளையும் கண்டறிந்து தொகுத்தலே செம்பதிப்பின் முதல் தலையாயப் பணி ஆகும். மூலச் சுவடிகளை கண்டறிந்து அவற்றின் இடையே உள்ள பாட வேறுபாடு களையும், பதிப்புகளில் உள்ள வேறுபாடு களையும் கண்டறிந்து அவற்றிற்கு மரபு வழியில் செம்மையாக ஆராய்ந்து பதிப்பிற்கும் முறைக்கே செம்பதிப்பு என்று பெயர்.

இன்று வரை செம்பதிப்பின் மூலமாக, முதன்மை காரணி ஆக அமைவது சுவடிகளே ஆகும். நூலாக எழுதப்பட்டு கட்டப்பட்ட ஓலைக்குப் பொத்தகம் என்றும் பொத்தகக் கவளி என்றும் பெயர் காணப்படுகிறது. தமிழகத்தில் மொத்தம் 40 இடங்களில் சுவடிகளைத் தொகுத்து பாதுகாத்து வருகின்றனர். இவற்றை ஒப்பிடுவதன் மூலம் நாம் செம்பதிப்பைப் பெற இயலும். “பழைய சுவடிகள் யாவும் கிழமாய் ஒவ்வொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்போரும் இலர்” எனக் கூறுகிறார் சி.வை.தாமோதரம்பிள்ளை.

ஒரு காலகட்டத்தில் சுவடிகள் பழையதாகின் அதனைப் புது ஓலை ஒன்றில் எழுதிப்படி எடுத்துப் பின்பு அவற்றை ஆற்றில் சப்பரம் செய்து விடுதல் மரபு. இது ஆடி 18 ஆம் நாள் பெருக்கன்று நடைபெறுவது வழக்கம். பின்பு இதுவே ஏடுகளை படி எடுக்காமலேயே தேர் சப்பரம் செய்து விடப்பட்டன. அதனால் பல பயனுள்ள ஓலைகள் நமக்கு இன்று கிடைக்காமல் போயின.

அச்சுக் காலம் தொடக்கப் பெற்ற கால கட்டத்தில் கல்லூரியில் பாடமாக வைக்கப்பட்ட நூல்கள் மட்டுமே அன்றைய தேவைக் கருதிப் பதிப்பிக்கப்பட்டன. அவற்றின் பதிப்புகளுள் பல பாட வேறுபாடுகள் உள்ளதாக காண முடிகிறது. அவற்றை கலையவே உ.வே.சாமிநாதையர், சி.வை.தாமோதரம் பிள்ளை முதலானோர் சுவடிகளைத் தேடி அலைந்து தெளிந்துள்ளனர். அதன் பயனாக சில நூல்கள் செம்பதிப்பாக ஆக்கப்பட்டுள்ளது. மற்றும் உள்ள நூல்களுக்கு செம்பதிப்பு வேண்டும் எனில் மேலும் உள்ள சுவடிகளைத் தொகுத்து அவற்றின் பாட வேறுபாடுகளைக் கண்டறிந்து, பதிப்புகளுடன் ஒப்பிட்டு, மரபுப் புணர்ச்சிகளும், யாப்பும் ஒப்பு நோக்கி வெளியிடப்பட வேண்டும். செம்பதிப்பின் முக்கியத்துவம் அறிந்து செம்பதிப்பினை பெறல் வேண்டும்.

## திருமுருகாற்றுப்படையின் சுவடிகளும், பதிப்புகளும்

திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டில் முதல் பாட்டாக வைத்து வணங்கப்படும் நூலாகும். தெய்வப் புலமையும் தீந்தமிழ் உணர்வும் ஓங்கிய பக்திச்சுவை நனி சொட்ட நக்கீரர் பெருமானார் இயற்றப்பட்ட நூல் இது. தமிழ் இலக்கிய வகை கள் ஆறினில் சங்க இலக்கியம்,பக்தி இலக்கியம் என இரண்டு இலக்கிய வகைகளுள் வைக்கப்பட்டுள்ள ஒரே நூல் இதுவே ஆகும். தன்னேர் இலாத் தமிழ் மொழியால் மண்ணோருக்கும் விண்ணோருக்கும் பெறலரும் பரிசல் நல்கும் பெருமையினை உடைய நூல் எனவே இது ஆற்றுப்படையில் ஒன்றாக உள்ளது.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரியில் உள்ள 426 சுவடிகளில் செவ்விலக்கிய சுவடிகள் பல உள்ள நிலையிலும் திருமுருகாற்றுப்படை மட்டுமே இரண்டு சுவடிகட்டுகள் உள்ளன. இவை இரண்டிற்குமே பாட வேறுபாடுகள் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தில் உள்ள தமிழ் சுவடிகளின் எண்ணிக்கை 3869 ஆகும். அவற்றுள் சங்க இலக்கியச் சுவடிகள் எனக் கண்டறியப்பட்டவை மொத்தம் எட்டு சுவடிகள் (சுவடிகளின் எண்கள்: 227, 689 (இ), 803(சி), 823(பி), 973, 282(பி), 1587(பி), 1607(சி)). இவை அனைத்தும் திருமுருகாற்றுப்படை சுவடிகள் ஆகும். இவை மட்டும் அன்றி தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், சென்னை மற்றும் திருவனந்தபுரத்தின் கீழ்த்திசைச் சுவடி நூலகம், கொல்கத்தா இந்திய தேசிய நூலகம், டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் நூலகம், பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்திய நிறுவனம், திருவாவடுதுறை

ஆதீனம்,சிதம்பரம் ஸ்ரீ மௌன சுவாமிகள் மடம், பிரான்சின் பாரிஸில் உள்ள பிப்பிலோதேகா அப்போஸ்டிலிக் ஆகிய இடங்களில் உள்ளன.

## பதிப்பு

திருமுருகாற்றுப்படையின் முதல் பதவுரை ஆனது அர. இலக்ஷ்மணன் அவர்களால் 1839 இல் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவிச் செய்யப்பெற்றது. தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா அவர்கள் 1889 இல் அரிதின் முயன்று "பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்" என முதல் பதிப்பை வெளியிட்டார்.

திரு மகாதேவ செட்டியார் அவர்கள் 1924இல் திருமுருகாற்றுப்படை மூலமும் பரிமேலழகர் உரையும் எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளார். திரு. எம். ஆறுமுகம் பிள்ளை (1927) "திருமுருகாற்றுப்படை சிற்றராய்ச்சி" எனும் பதிப்பையும், பண்டிதர் சு. அருளம்பலம் "திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி (1937) உரை" எனும் பதிப்பும், திரு.வை.மு கோ. பதிப்பு ஆகியவற்றை முந்தைய பதிப்புகளாக குறிப்பிடலாம். மேல் குறிப்பிட்டுள்ள சுவடிகளையும் முதன்மைப் பதிப்புகளையும் ஒருசேர ஆராய்வதன் மூலம் திருமுருகாற்றுப்படைக்கான செம்பதிப்பினைப் பெற இயலும்.

## பாட வேறுபாடுகள்

டாக்டர் உ.வே.சா. "என் சரித்திரம்" என்ற நூலின் பதிப்பு பணி பற்றி குறிப்பிடுபவை "ஏட்டுச்சுவடிகளிள் கண்ட பாடங்களின் வேறுபாட்டை கண்டு கண்டு என் மனம் புண்ணாகி இருக்கிறது. இன்னபடி இருந்தால் பொருள் சிறக்கும் என்று எனக்குத் தோன்றின இடங்களிலும் பிரதியில் உள்ளதையே பதிப்பித்தேன்". எனக் கூறியுள்ளார். இவ்வகை பாட வேறுபாடுகள் பலவும் தமிழ்க் கல்லூரி நூலகத்தின் சுவடிகளிலும் உள்ளன. அதனை கண்டு தெளிதல் வேண்டும்.

திருமுருகாற்றுப்படைச் சுவடியில் கமஞ்சூன் என்பது கமன்சூன், பராரை என்பது பரா அறை, மதனுடை என்பது மகனோடே என்பது போன்று 50-க்கும் மேற்பட்ட பாட வேதங்கள் உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது. இச்சுவடிகளை மேலும் உள்ள பல பழைய பதிப்புகளை ஒப்பிட்டு நோக்கின் இன்னும் செம்மையுரும் என்பதில் ஐயமில்லை.

சிலப்பதிகாரச்சுவடி ஆனது முற்றுப்பெறாமல் இருப்பதுடன், நாடுகாண் காதையில் வரும் கட்டுரைபூம்புகார்காதை எனகுறிப்பிடப்பட்டுள்ளது. இதன் உள்ளும் பல பாட வேறுபாடுகளை காண முடிகிறது. இத்தகு பாட வேறுபாடுகளை கண்டறிந்து விளக்குவதாக இவ்வியல் அமைகிறது.

## முடிவுரை

பேரூராதீன கல்லூரி நூலகத்தில் உள்ள சுவடிகள் பெறப்பட்ட வரலாறும் அங்குள்ள சுவடிகளில் பெயர்கள் அவைதாம் கூறும் பாடங்கள் குறித்துக் கூறப்பட்டுள்ளது. மொத்த சுவடிகளில் செவ்விலக்கியச் சுவடிகளைத் தனித்து பிற இடங்களில் உள்ள சுவடிகளுடன் ஒப்பிட்டு விளக்கப்பட்டுள்ளது. செவ்விலக்கியச் செம்பதிப்பில் சுவடிகளின் பங்கு குறித்து கூறப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படையின் சுவடிகளில் உள்ள பாட வேறுபாடுகள், அதன் பழம்பதிப்புகள் குறித்த செய்திகள், அவற்றின் ஒப்பீட்டுப் பார்வை போன்றவை இக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

## துணை நூற்பட்டியல்

1. பேரூராதீனச் சுவடிகள் (செவ்விலக்கியச்சு வடிகள்)
2. ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம், டாக்டர் உ.வே.சா. (நூ.ஆ), கேசரி அச்சுக் கூடம், சென்னை. 1933.
3. என் சரித்திரம், டாக்டர் உ.வே.சா. (நூ.ஆ), கல்யாணசுந்தரார் ஐயர் (ப.ஆ), கபீர் அச்சுக் கூடம், சென்னை. 1950.
4. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்கினியார் உரையும், டாக்டர் உ.வே.சா. (ப.ஆ), தியாகராசர் விலாச வெளியீடு, 1961.
5. திருமுருகாற்றுப்படை மூலம், பரிமேலழகர் (உரை), இரா. அறவேந்தன்(தொ.ஆ), பரிசல் வெளியீடு, 2023.
6. திருமுருகாற்றுப்படை சிற்றாராய்ச்சி, எம். ஆறுமுகம் பிள்ளை(நூ.ஆ), ரெலி எலக்ரிக் அச்சுக்கூடம், 1927.